செ.வெ.எண்: 53 /ஜூன் நாள்: 24.06.2018

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பாக நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு நிறுவனங்களில் பணிக்கு தேர்வு பெற்ற இளைஞர்களுக்கு

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்.இ.ஆ.ப., அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சதக் தஸ்தகீர் கல்வியியல் கல்லூரி வளாகத்தில் 23.06.2018 அன்று மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பாக நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு நிறுவனங்களில் பணிக்கு தேர்வு பெற்ற இளைஞர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.. அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பாக நேற்று (23.06.2018) மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள சதக் தஸ்தகீர் கல்வியியல் கல்லூாயீல் இளைஞர்கள் பயன்பெறும் வகையில் தனியார் துறை நிறுவனங்கள் பங்கேற்ற வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் டி.வி.எஸ், A To Z, யுரேகா போர்ப்ஸ், அப்பலோ மருத்துவமனை உட்பட 60க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் பங்கேற்று தங்களது நிறுவனங்களில் தகுதியான இளைஞர்களை தேர்வு செய்தனர். இந்த முகாமானது காலை 10 மணிக்கு துவங்கி மாலை 3 மணி வரை நடைபெற்றது. இம்முகாமில் ஏறத்தாழ 800க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவற்றில் பல்வேறு நிறுவனங்களில் தேர்வு பெற்ற 268 நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த முகாமிற்கான ஏற்பாடுகளை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் திரு.கருணாகரன் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பணியாளர்கள் மேற்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**